பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 01 | சனிக்கிழமை | 15.03.2025 | அதிர்வு 222

## எம்.பி. பதவியை துறந்தார் நஸீம்

### ஏறாவூர் நகர சபையின் வேட்பாளராகப் போட்டி



கட்சித் தலைமையின் வேண்டுகோளுக்கிணங்க ஏறாவூர் நகர சபையின் வேட்பாளராகப் போட்டி 07

# கச்சதீவு திருவிழா நேற்று ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று வெள்ளிக் கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன நடைபெற்றன.

இந்தப் பெருவிழாவில் தமிழ்நாட்டின் சிவகங்கை மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை 06



## 25 வருடங்களாக இருட்டறையில் இருந்த

# பட்டலந்த வதை முகாம் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு!

### இரு நாட்கள் விவாதம் நடத்தப்படும் என்று அமைச்சர் பிமல் அறிவிப்பு



**பட்டலந்த வதை முகாம் அறிக்கை 25 வருடங்களாக இருட்டறையில் இருந்தது என்று சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

**பட்டலந்த அறிக்கையை நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** 06

## தென்னிலங்கையில் நேற்றும் ஒருவர் சுட்டுக் கொலை!




தென்னிலங்கையில் நேற்றும் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது. இதில் ஒருவர் உயிரிழந்தார். 07

## மூதூர் இரட்டைக் கொலை: 15 வயது சிறுமி கைது!




திருகோணமலை, மூதூரில் அம்மம்மா முறையான இரண்டு பெண்களை வெட்டிக் கொன்ற குற்றச்சாட்டில் 15 வயது சிறுமியைப் பொலிஸார் 06




தேர்தல் என்றாலே பொய், பித்தலாட்டம், புனைகதை, புளுகு என்றாகிவிட்ட காலம் இது. மக்கள் காதில் பூச்சுற்றி, வாக்குகளை சூறையாடுவதுதான் தேர்தலில் தந்திரம் – தந்திரோபாயம் – என்று கட்சிகள் கருதுகின்றமையால் அதுதான் தினசரி விவகாரமாகி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டாலும், அப்போது அதனை 'கூட்டமைப்பு' என்றே அழைத்தோம். அழைப்போம். சின்னம் தமிழரசுடையது என்றாலும், அப்போது கட்சியை 'கூட்டமைப்பு' என்று குறிப்பிடுவதில் தப்பில்லை.

அது போலவே 'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' என்ற பெயரில் தமது கட்சியைப் பதிவு செய்து வைத்துவிட்டு, இப்போதெல்லாம் ஏனைய சில தரப்புகளையும் தங்களோடு கூட்டு சேர்த்திருப்பதாகக் காட்டிக் கொண்டு, 'தமிழ் தேசிய மக்கள் முன்னணி' என்றுதான் அவர்கள் அக்கட்சியை அடையாளப்படுத்துகிறார்கள். அதுவும் 06




# 6ஆம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் அடிப்படையில், இந்த வருடம் 6 ஆம் தரத்துக்கு மாணவர்களைப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற பாடசாலைகளை https://g6application.moe.gov.lk/#/ என்ற இணையதளத்தில் பார்வையிட முடியும்.

2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

எனினும், இந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலைகள் கிடைக்காத மற்றும் ஏனைய நியாயமான காரணங்களுக்காக தங்களுக்கான பாடசாலையை மாற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்காலத்தில் இணையவழி ஊடாக மாத்திரம் மேன்முறையீடு செய்ய முடியும்.

மேலும் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான காலஅவகாசம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மேன்முறையீடுகளும் இணையவழி ஊடாக மட்டுமே கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியர் துஷ்பிரயோக விவகாரம் சந்தேகநபர் விளக்கமறியலில்!



அநுராதபுரம் வைத்தியசாலை வைத்தியர் விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் பிரசன்னப்படுத்தப்பட்டதை அடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதவான் இதன்போது உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர், வசித்து வந்த கல்னேவ பகுதியில் உள்ள வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அங்கிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியரின் கையடக்க தொலைபேசியை தேடுவதற்காக அவரது வீடு சோதனையிடப்பட்ட போதே இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரையிலும் தொலைபேசி கிடைக்கப்பெறவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளரை உடன் அமுலாகும் வகையில் பதவி நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக பொலன்னறுவை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எச்.எம்.யு.ஐ கருணாரத்னவை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெரும்போக செய்கைக்காக இதுவரை 952 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கி வைப்பு

கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளான பெரும்போக நெற்செய்கைக்காக இதுவரை 952 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் கமநல பாதுகாப்பு சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நெற்செய்கை பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளின் வங்கி கணக்குகளில் இழப்பீட்டுத் தொகை வைப்பிலிடப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல பாதுகாப்பு சபையின் தலைவர் பேமசிறி ஜயசிங்க ஆராச்சி தெரிவித்துள்ளார்.

# இரவு நேர சேவையிலிருந்து விலகுகின்றனர் கிராம சேவகர்கள்

பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் தீர்வு கோரி இலங்கை கிராம சேவகர்கள் நேற்று நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், பாதுகாப்பு பிரச்சினை காரணமாக அனைத்து பெண் கிராம உத்தியோகத்தர்களும் நேற்று முதல் இரவு நேர சேவைகளிலிருந்து விலகுவதாக இலங்கை கிராம சேவகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இரவு நேர முறைமைகளில் பணியாற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.




# வன விலங்குகள் தொடர்பான தேசிய கணக்கெடுப்பு இன்று



விவசாயப் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகள் பற்றிய தேசிய கணக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது.

அன்று வீட்டுத்தோட்டம், விவசாய நிலம், பாடசாலை, வழிபாட்டுத் தலம் அல்லது நிறுவனத்தில் இருக்கும் குரங்குகள், அணில்கள் மற்றும் மயில்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தில் பதிவு செய்து பிரதேச கிராம அலுவலர் அல்லது பொருளாதார மேம்பாட்டு அலுவலர் அல்லது சமுர்த்தி மேம்பாட்டு அலுவலர் அல்லது விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரிடம் கையளிக்குமாறு விவசாய, கால்நடை வளர்ப்பு, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு அறிவித்துள்ளது.




# ஐந்து வருடங்களாகத் திறந்த பிடியாணையில் தேடப்பட்டு வந்தவர் சம்மாந்துறையில் கைது!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

ஐந்து வருடங்களாக அக்கரைப்பற்று பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாரினால் 2020 ஆண்டு முதல் கடந்த 5 வருடங்களாக திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இந்தச் சந்தேக நபர் திறந்த பிடியாணை மூலம் தேடப்பட்டு வந்துள்ளார்.

இவர் சம்மாந்துறைப் பிரதேசத்தில் நடமாடுகின்றார் எனச் சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வு அதிகாரிகளினால் சம்மாந்துறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்கவின் பணிப்புரை மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் அறிவுறுத்தலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையில் சார்ஜண்ட் ஐ.எல்.எம். இஸ்மாயில், பொலிஸ் உத்தியோகத்தர் எம். நிரஞ்சன் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையை தொடர்ந்து சந்தேக நபர்சிக் கைது செய்தனர்.

நேற்று இரவு சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளினால் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 46 வயதுடைய இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒன்றாக மதுபானம் அருந்திய நண்பர் மீது தாக்குதல் ஒருவர் உயிரிழப்பு; தாக்கிய மூன்று நண்பர்கள் கைது

## மட்டக்களப்பு சின்னவத்தையில் சம்பவம்



**(கனகராசா சரவணன்)**

மதுபானம் அருந்த சென்ற நான்கு நண்பர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தையடுத்து ஒருவர் மீது மற்றைய மூன்று பேரும் பொல்லால் தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை பகல் மட்டக்களப்பு வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவிலுள்ள சின்னவத்தை பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட 3 பேரையும் தாங்கள் கைது செய்துள்ளனர் என வெல்லாவெளி பொலிஸெ தெரிவித்தனர்.

வெல்லாவெளி சின்னவத்தை பக்கியெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய புவனேந்திரராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று பகல் 12 மணியளவில் தம்முடைய 3 நண்பர்களுடன் சின்னவத்தை பகுதியிலுள்ள வயல்பகுதிக்கு சென்று ஒன்றாக இருந்து மதுபானம் அருந்தியுள்ளார்.

அங்கு இவருக்கும் ஏனைய 3 நண்பர்களுக்கும் இடையே வாய்த்தர்கம் ஏற்பட்டிருக்கின்றது. அப்போது அவரை மற்றைய 3 பேரும் சேர்ந்து பொல்லால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். அந்த வயல்பகுதிக்கு மாலை அளவில் சென்ற கிராம உத்தியோகத்தர் சடலம் ஒன்று இருப்பதைகண்டு அதனைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

இதனையடுத்து பொலிஸார் நீதிமன்ற அனுமதியைப் பெற்று, சடலத்தை மீட்டு,பிரேத பரிசோதனைக்காக மட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். நண்பனைத் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டின் பெயரில் 3 நண்பர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட செலவுச்சீட்டுகளின் செல்லுபடி காலம் நீட்டிப்பு

பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ஆறாயிரம் ரூபா பெறுமதியான செலவுச்சீட்டுகளின் செல்லுபடியாகும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவுச்சீட்டுகளின் கால எல்லையானது இன்றுடன் நிறைவடையவிருந்தது.

இதன்படி, மாணவர்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு அந்த கால எல்லையானது எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெலிவேரிய, அக்மீமன துப்பாக்கிச் சூடுகள் விசாரணைக்காக 8 பொலிஸ் குழுக்கள் நியமனம்



கம்பஹா – வெலிவேரிய மற்றும் காலி – அக்மீமன பகுதிகளில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக 8 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன்படி, காலி – அக்மீமன பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலைகள் அதிகாரி ஒருவர் உயிரிழந்ததுடன், 26 வயதுடைய ஒருவர் காயமடைந்தார்.

அதேநேரம், கம்பஹா – வெலிவேரிய பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இதுவரையிலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர், திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களின் தலைவரான கெஹேல்பத்தர பத்மகேவுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட மக்களுக்கு நன்கு தெரிந்த விடயம் தான். அதனால், அதில் சுத்துமாத்து – தவறு – இருப்பதாகக் கூற எதுவுமில்லை.

ஆனால், இப்போது வவுனியாவிலும் தெற்கின் பிற இடங்களிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கதிரை சின்னத்தில் போட்டியிடுவதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன. சம்பந்தப்பட்ட தரப்பினரே அப்படி செய்திகளைக் கொடுக்கின்றார்கள். ஆனால் உண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான விவகாரம் நீதிமன்ற வழக்கில் இழுபடுகின்றது.

'சொப்பன சுந்தரி வைத்திருந்த கார் இங்கிருக்கிறது. சொப்பனசுந்தரியை இப்போது வைத்திருப்பவர் யார்?' என்ற கவுண்டமணி – செந்தில் பகிடி போல, இப்போது சுதந்திரக் கட்சியின் பெயர் இங்கு இருக்கின்றது, அந்தக் கட்சியை வைத்திருப்பவர் யார் என்பதுதான் கேள்வி என்ற மாதிரி விடயம் நீதிமன்றத்தில் உள்ளது. கட்சியின் உண்மையான நிர்வாகிகள் யார் என்று தெரியாத நிலையில், அக்கட்சியின் பெயரை யாருமே பயன்படுத்த முடியாத நிலைமை நீடிக்கிறது. அதனால் அக்கட்சியின் கை சின்னத்தையும் எந்த தரப்பும் பயன்படுத்த முடியாத நிலைமை உள்ளது.

ஆயினும், முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடம் பெற்ற 'பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 'என்ற கூட்டமைப்பின் பதிவு செல்லுபடியாகும் நிலையில் நீடிக்கின்றது. அந்தக் கூட்டணியின் சின்னம்தான் கதிரை.

அந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பெயரில், அதன் கதிரைச் சின்னத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்து கொண்டு, சுதந்திரக் கட்சி கதிரைச் சின்னத்தில் இம்முறை போட்டியிடுகின்றது என்று பிரசாரம் செய்கிறார்கள்.

நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால், சுதந்திரக் கட்சியும் அதன் கைச்சின்னமும் முடக்கப்பட்டுள்ள நிலையில, வேறொரு கூட்டின் பெயரில், அதன் கதிரைச் சின்னத்தில் போட்டியிடும் அணியை சுதந்திரக் கட்சியாகக் காட்டி, மக்கள் காதில் பூச்சூற்றுகிறார்கள் அந்தக் கட்சியின் ஒரு குழுவினர்.

யாழ்ப்பாணத்தில் இன்னொரு விடயம் நேற்று முன்தினம் அரங்கேறியது.

அமைச்சர் சந்திரசேகரன் பட்டுப் பீதாம்பர ஜிகினா ஜிப்பாவோடு தனது கட்சியின் யாழ் மாவட்ட எம்.பிக்கள் மூவரையும், கட்சியின் வடக்கு நிர்வாகிகள் பலரையும் ஒன்று சேர்த்து ஆரவாரமாக யாழ் செயலகத்துக்கு வருகை தந்திருந்தார். அதையொட்டி அவர் தெரிவித்த கருத்து மாலை முரசு உட்பட ஊடகங்களில் அன்றும் அடுத்த நாள் நேற்றும் வெளியாகின.

தேர்தல் கட்டுப்பணம் செலுத்த அவர் யாழ் செயலகத்துக்கு நேற்று முன்தினம் வந்தார் என்றே கூறப்பட்டது. ஆனால் அன்றைய தினம் போயா விடுமுறை. தேர்தல் கட்டுப் பணம் அன்று செலுத்த முடியாது என்பது தேர்தல் திணைக்கள அறிவிப்பு. அது தெரியாமல், ஆரவாரமாக செயலகத்துக்கு வந்த பின்னர்தான், தேர்தல் நடவடிக்கைக்குப் பிள்ளையார் சுழி போடும் முதல் செயற்பாடு – கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை – அடிசறுக்கில் போனதாக அவருக்கும் அவரது அணியினருக்கும் விளங்கியிருக்கும் போல.....!

இனி என்ன, 'முதல் கோணல், முற்றிலும் கோணலாக' போய்விடுமோ தெரியவில்லை.

ஆயினும் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று காட்டுவதற்காக நேற்று முன்தினம் செய்ய முடியாத வேலையை, நேற்று ஓர் எம்.பி. தலைமையில் சிலரை அனுப்பி பணம் கட்டும் வேலையை அமைச்சர் சந்திரசேகரன் வெற்றிகரமாக முன்னெடுத்தார்.

ஆயினும் நேற்று முன்தினம் ஏற்பட்ட ஏமாற்றத்தை – போயா தினத்தில் தேர்தல் கட்டுப் பணம் செலுத்த முடியாது என்பது கூடத் தெரியாமல் தாங்கள் செயலகத்துக்கு வந்து ஏமாறிப் போனதை – காட்டாமல் சமாளிப்பதற்காக, நேற்றுப் பணம் செலுத்திய பின்னர் கட்சி சார்பில் பேட்டியளித்த அவரது எம்பி. ஒருவர் 'நேற்று (போயா தினத்தன்று) வேட்பாளர் பட்டியலை கையளிக்க வந்திருந்தோம்' என்று தாமாகவே தேடி சமாதானம் சொல்லிக் கொண்டார்.

அப்படிக் கட்டுப் பணம் செலுத்த முன்னர், வேட்பாளர் பெயர், விவரங்களைக் கொடுக்கும் தேர்தல் முறைமை பற்றி எனக்குத் தெரியவில்லை.

தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் பற்றி நீண்ட பத்திரிகை அனுபவம் கொண்ட எனக்கு அது தெரியவில்லை. இப்படிக் கட்டுப் பணம் செலுத்த முன்னர் கொடுக்க வேண்டிய பட்டியல் யாது என்பது பற்றிய விளக்கத்தை அமைச்சர் சந்திரசேகரன் தரப்பு தந்தால் அது எனக்கும் புரிய வரும், நான் வாசகர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறி புரிய வைக்க முடியும்.

இப்படி தேர்தலின் பெயரால் அவ்வப்போது அரங்கேறும் தில்லுமுல்லுகளையும் இப்பத்தியில் வாசக நண்பர்களோடு அவ்வப்போது பகிர்ந்து கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்.

---

## கச்சதீவு திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லூர்து ஆனந்த்

ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், நெடுந்தீவு பங்குத் தந்தை உள்ளிட்ட அருட்தந்தைகள், அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கச்சத்தீவு திருவிழாவில் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் வரையிலான பக்தர்கள் பங்கேற்றார்கள். இன்று சனிக்கிழமை காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவிழா நிறைவுறும்.

திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

---

## பட்டலந்த வதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"1976ஆம் ஆண்டில் பெருமளவிலான பலத்தைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு மக்களுடைய அபிப்பிராயம் இல்லாமல் ஒரு நிறைவேற்று ஜனாதிபதியை நியமித்தது.

ஜனநாயக ரீதியான தொழில்சங்கங்களைச் சேர்ந்தவர்கள், மாணவர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், இலக்கியவாதிகள், சங்கத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள் போன்றவர்களைத் தடுத்து வைத்து மக்களுக்கு எதிராக மனிதக் கொலைகளை நடத்தினார்கள்.

இந்தச் சித்திரவதைக் கூடத்தில் அப்போதைய அரசின் தலையீடுகளால் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். சித்திரவதைகள் தொடர்பாக சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் கண்டனங்கள் வெளியிடப்பட்டன. அரச மாற்றங்கள் காரணமாக இந்தச் சாபத்துக்கு எதிராக தற்போது மீண்டும் ஜனநாயகம் கட்டி எழுப்பப்பட்டிருக்கின்றது.

பட்டலந்த போன்ற வதை முகாம்கள் தொடர்பாக அப்போதைய தலைவர்கள் அந்த இடத்துக்குச் சென்று வெளிப்படுத்தியபோது மக்கள் நீதி, நியாயங்கள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்த்தார்கள். தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்றறிய ஆவலோடு எதிர்பார்த்தார்கள். அந்தக் கொடூரமான நிலைக்கு அரசியல் பூச்சு பூசுவதற்கு முயற்சித்தார்கள். பொது மக்களுக்கு எதிராகக் குற்றங்களை செய்தவர்கள் அனைவரும் சேர்ந்திருந்தார்கள், சட்டத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அனைத்து விடயங்களையும் செய்திருந்தார்கள்.

இந்த அறிக்கை இருட்டறையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. 25 வருடங்களுக்கு பின்னர் வெளியே வந்திருக்கின்றது. பட்டலந்த சித்திரவதை முகாம் சம்பந்தமான விடயங்கள் இந்த அறிக்கையில் இருக்கின்றன.

இந்த அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும். ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பாக மேலும் முடிவுகளை எடுக்க ஜனாதிபதி விசேட குழுவை நியமிக்கவுள்ளார். அறிக்கை தொடர்பில் 2 நாள்கள் விவாதம் நடத்த எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

---

## மூதூரில் இரட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்துள்ளனர்.

மூதூர் – தாஹா நகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

தாஹா நகரிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சகோதரிகளான இருவர் வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டனர். சிறீதரன் இராஜேஸ்வரி (வயது – 68) மற்றும் சக்திவேல் ராஜகுமாரி (வயது – 74) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரான சிறுமியின் தாயார் வைத்தியசாலையில் பணியாற்றுகின்றார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு அவர் பணிக்குச் சென்றுள்ளார். இந்தநிலையில், வீட்டில் சந்தேகநபரான சிறுமி, அவரின் அம்மம்மா, அம்மம்மாவின் மூத்த சகோதரி ஆகியோர் இருந்துள்ளனர்.

நேற்று அதிகாலை மேற்படி இரண்டு பெண்களும் சடலங்களாக மீட்கப்பட்டனர். இரண்டு பெண்களின் கழுத்திலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. காயத்துடன் மீட்கப்பட்ட 15 வயது சிறுமி மூதூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

காயமடைந்த சிறுமியிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் சிறுமி தானே அந்தக் கொலைகளை செய்தார் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அத்துடன், அம்மம்மா தன்னை எப்போதும் திட்டுகிறார் என்றும், அவருக்குத் தன் மீது பாசம் இல்லை என்றும், மன அழுத்தம் காரணமாக இருவரையும் கொலை செய்து விட்டதாகவும் அந்தச் சிறுமி கூறினார்.

இதையடுத்து, சிறுமியைக் கைது செய்த மூதூர் பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# காரைதீவு மாவடிப்பள்ளி பிரதான வீதியை கடந்து தினசரி பயணிக்கும் யானைகள்!

## மக்கள் அச்சத்துடனேயே போக்குவரத்து

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் தினமும் காரைதீவு மாவடிப்பள்ளி பிரதான வீதியினூடாக நூற்றுக்கணக்கான யானைகள் கடந்து செல்கின்றன.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்து சிலமணி நேரம் ஸ்தம்பிதமடைகின்றது. மக்கள் அச்சத்துடன் பயணம் மேற்கொள்கின்றனர்.

நேற்றும் நூற்றுக்கணக்கான யானைகள் பிரதான வீதியை குறுக்கறுத்துச் சென்றன.

அச் சமயம் வன விலங்குகள் பொறுப்பு உத்தியோகத்தர்கள் அங்கு கடமையில் நின்றனர்.

அம்பாறை கரையோரப் பகுதிகளில் அறுவடை நடைபெறும் சமகாலத்தில் யானைகளின் வருகை பலத்த சேதத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தி வருகிறது.

அண்மையில் காரைதீவு – நிந்தவூர் எல்லையில் உள்ள அறுவடைக்கு தயாராக இருந்த இருவேறு விளைந்த வயல்கள் யானைகளின் அட்டகாசத்தால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

## தென்னிலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலி – அம்பலாங்கொடை – இடந்தோட்டையில் நேற்று மாலை இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது.

இதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த – வயது நபராவார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் தெரியவரவில்லை. சந்தேக நபர்களும் நேற்று இரவு வரை கைது செய்யப்படவில்லை.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலி – அக்மீமன பகுதியில் பூஸா சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதேவேளை, நேற்றுமுன்தினம் கம்பஹா – வெலிவேரிய பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எம்.பி. பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யிடுவதாகவும், அதற்காக நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜிநாமா செய்வதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் சாலி நளீம் சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"என்னை நம்பி எனது கட்சித் தலைமையால் எனக்கு ஒப்படைக்கப்பட்ட தேசிய பொறுப்பை, எனக்கு அங்கீகாரம் வழங்கிய எனது மண்ணின் மக்களுக்கும் கட்சிக்கும் சமர்ப்பணம் செய்த ஒரு வரலாற்றுப் பெருமையை இந்த உயரிய சபையில் நிறைவேற்றிய பெருமையுடன் பதவியைத் தக்க வைக்கவும் நிலைநிறுத்தவும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காற்றிலே பறக்கவிட்டு அற்ப சலுகைகளை எதிர்பார்த்து கட்சிக்கும் பிறந்த மண்ணுக்கும் வாக்களித்த மக்களுக்கும் தலைகுனிவை உண்டாக்கிவிட்டோர் வரிசையில் சேராது எடுத்த அமானிதத்தை சரிவர நிறைவேற்றி மக்கள் பிரதிநிதியாக தலைநிமிர்ந்து இந்த உயரிய சபையிலிருந்து விடைபெற்றுக்கொள்கின்றேன்.

அரசியல் பதவிகளில் கிடைக்கும் ஊதியம், சலுகைகள் என்பன என்னை அங்கீகரித்த மக்களுக்கு உரித்தான ஒன்றாகும். அதனைத் துளியும் எனக்காகப் பாவிக்காது மக்களுக்கு வழங்கும் நடைமுறையை 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை பிரதிநிதியாக ஏறாவூர் நகர சபையில் முன்னெடுத்து இன்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நடைமுறைப்படுத்தியிருக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த 3 மாத காலத்துக்குள் ஏழரை இலட்சம் ரூபா சம்பளத்தையும் எனக்கு வாக்களித்த மக்களுக்காக நான் பகிர்ந்தளித்துள்ளேன்.

எமது தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியினுடைய செயலாளர், கட்சியினுடைய அதியுயர்பீட உறுப்பினர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இந்தத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நான் கேட்காமலேயே என் மீது நம்பிக்கை வைத்து தந்த கட்சித்தலைமைக்கு நான் எந்தக் காலத்திலும் துரோகம் செய்யாது அவ்வாறு துரோகம் செய்தவர்களின் பழியையும் துடைத்து எறிபவனாக கட்சியால் எனக்கு வழங்கப்பட்ட இந்தப் பிரதிநிதித்துவத்தை கட்சி கேட்கின்ற நேரத்தில், கட்சியின் தீர்மானத்துக்குத் தலைவணங்குபவன் என்ற அடிப்படையில் எனது இந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை நான் கட்சிக்காக ஒப்படைக்கின்றேன். இராஜிநாமா செய்கின்றேன்.

என்னுடைய கட்சி வேண்டிக்கொண்டதற்கிணங்க ஏறாவூர் நகர சபையினுடைய வேட்பாளராக நான் போட்டியிடவுள்ளேன். ஏறாவூர் மக்கள் ஒருபோதும் எமது கட்சிக்கு துரோகம் செய்யமாட்டார்கள். இந்தக் கட்சிக்கு அவர்கள் என்றுமே கடமைப்பட்டவர்கள். அவர்கள் எமது கட்சிக்கு வெற்றியைப் பெற்றுத் தருவார்கள் என்று கூறி இன்றிலிருந்து நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜிநாமா செய்துகொள்கின்றேன்." – என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம் .எஸ் நளீம் நேற்று சபையில் பிரியாவிடை உரை நிகழ்த்திய பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீரவிடம், அவரது அலுவலகத்தில் தனது இராஜிநாமாக் கடிதத்தைக் கையளித்தார். அதன்போது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வதை முகாம் கதை

பட்டலந்தை வதை முகாம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை குறித்து முக்கிய அறிவிப்பு ஒன்றை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை ஞாயிற்றுக்கிழமை வெளியிடுவார் என அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் முக்கிய அம்சங்களை ரணில் விக்கிரமசிங்க இந்த அறிக்கையில் தெளிவுபடுத்தி வெளிப்படுத்துவார் என அவரது கட்சி தரப்பில் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த காலப்பகுதியில், குறிப்பாக 1988 - 90 ஆம் ஆண்டு காலப் பகுதியில், பட்டலந்தை வீடமைப்புத் திட்டத்தில் இயங்கியதாகக் கூறப்படும் வதை முகாமில் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள், ஆள்கள் காணாமல் போகச் செய்தல் போன்ற குற்றங்கள் இடம் பெற்றன என அந்த நேரத்தில் செய்திகள் வெளியாகி இருந்தன.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றமையை அடுத்து இந்த பட்டலந்தை முகாம் குறித்து விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை 1995 செப்டம்பர் 21ஆம் திகதி நியமித்தார்.

அந்த வதை முகாமில் இடம் பெற்றவை எனக் கூறப்படும் சட்ட விரோதமான தடுப்புகள், சித்திரவதைகள், படுகொலைகள், ஆள்கள் காணாமல் போகச் செய்தல் போன்றவை குறித்து விசாரிக்கும்படி இந்த ஆணைக்குழு பணிக்கப்பட்டிருந்தது.

சுமார் மூன்று வருடங்கள் சாட்சியங்களைப் பதிவு செய்த அந்த ஆணைக்குழு, 1998 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. ஆயினும் அறிக்கையின் விவரங்கள் வெளியாகவும் இல்லை. பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை.

இந்த பட்டலந்தை வதை முகாமுடன் 1977 முதல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், பிரதி அமைச்சராகவும், பின்னர் அமைச்சராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொடர்பு இருந்ததாக அச்சமயத்தில் பேச்சு அடிபட்டது.

1977 பொது தேர்தல் மூலம் நாடாளுமன்றுக்குப் பிரவேசித்தவர் ரணில் விக்கிரமசிங்க. அப்போது கம்பஹா மாவட்டம் பியகம தொகுதியில் அவர் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அந்தத் தொகுதியில் உள்ள பட்டலந்தை கிராமத்தில் அரச உரக் கூட்டுத்தாபன ஏற்பாட்டில் அமைக்கப்பட்டதுதான் பட்டலந்தை வீடமைப்புத் திட்டம். அங்கு தலைமறைவு இயக்கங்களுக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கைகளைக் கையாளும் பிரிவு செயற்பட்டதாகக் கூறப்படுகிறது. 1987 - 89ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பியினரின் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்பட்ட இந்தப் பொலிஸ் பிரிவின் வதை முகாம் பகுதிக்கு அந்தத் தொகுதி எம்.பியான ரணில் விக்கிரமசிங்க வந்து செல்வது வழக்கம் என்று கூறப்படுகிறது.

அண்மையில் சர்வதேச ஊடகமான அல் ஜஸீரா தொலைக்காட்சி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை செவ்வி கண்டபோது இந்த பட்டலந்தை வதை முகாம் பற்றிய ஆணைக் குழு அறிக்கை குறித்து கேள்வி எழுப்பியமையை அடுத்து, அந்த விவகாரம் மீண்டும் பூதாகரம் எடுத்திருக்கிறது.

அதனை அடுத்து கடந்த 27 ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்த அந்த ஆணைக் குழு அறிக்கையை தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றது.

அந்த நீண்ட அறிக்கையின் பிரதான விடயங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை வார வெளியீடு பத்திரிகைகளில் விவரமாக வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கான தமது பதில்கள், பிரதிபலிப்புகள், விளக்கங்களை அன்றைய தினம் நாட்டு மக்களுக்கு முன் வைக்க ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கிறார் எனக் கருதப்படுகிறது.

எது, எப்படியாயினும் தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும். சுமார் 37 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இப்போது நீதி தேடி நடவடிக்கை எடுப்பதாகப் பம்மாத்து பண்ணுவது பொருத்தமானதா என்பது தெரியவில்லை. ஆயினும், அரசியல் உள்நோக்கங்கள் கடந்து, காலம் தாமதித்தேனும் நீதி உண்மையில் நிலைநாட்டப்படுமானால் அது வரவேற்கத்தக்கதே.







# மீண்டும் இல்மனைற் அகழ்வதற்கு முயற்சியா? தாண்டியடியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தின் கரையோர திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் இன்மனைற் அகழ்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதை எதிர்த்து, அதனை உடன் நிறுத்துமாறு கோரி, தாண்டியடி பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

அக்கரைப்பற்று – பொத்துவில் பிரதான வீதியில் தாண்டியடி பாடசாலை அருகில் பொதுமக்கள் பலவித சுலோகங்களுடன் கூடிய பதாதைகளை ஏந்திய வண்ணம் பாரிய எதிர்ப்பை தெரிவித்தனர்.

அதனால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

தாண்டியடி மற்றும் உயிரி பொதுமக்கள் நூற்றுக் கணக்கானோர் இதில் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் உயிரி பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வதற்கான சாத்தியவளஅறிக்கை தயாரிப்பதற்காக குழுவினர் வந்திருக்கின்றனர் என்ற தகவல்கள் காட்டுத்தீபோல் பரவியது.

ஒருசில நிமிடங்களில் பொதுமக்களும் குவியத்தொடங்கினர். ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

















# ஆசிரியர் பற்றாக்குறை விரைவில் நிவர்த்தி செய்யப்படும்

## வவுனியா போகஸ்வெவ மகா வித்தியாலய நிகழ்வில் ஆளுநர் உறுதி

"எமது மாகாணத்துக்கு தென்மாகாணங்களிலிருந்து வரும் சிங்கள ஆசிரியர்களும் இடமாற்றங்களைக் கோருகின்றனர். இதனால் இங்குள்ள மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாத நிலைமை நீடிக்கின்றது. எதிர்காலத்தில் இங்கு கற்கும் மாணவர்கள் இந்தப் பிரதேசத்துக்கே ஆசிரியர்களாக வரவேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள போகஸ்வெவ மகா வித்தியாலயத்தில், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் 40 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட வகுப்பறை, ஆய்வுகூடம் என்பன அடங்கிய கட்டடத் தொகுதி கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டு தேசியக்கொடி, பாடசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்டடத்தை திறந்து வைத்த ஆளுநர், வகுப்பறைகளையும் சென்று பார்வையிட்டார்.

இதன் பின்னர் இடம்பெற்ற மண்டப நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்,

"வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் மாவட்டச் செயலர்களாக இருந்திருக்கின்றேன். இந்தப் பிரதேசத்துக்கு இப்போதுதான் முதல் தடவையாக வந்திருக்கின்றேன். உங்களின் அழைப்புக்கு நன்றியைக் கூறுகின்றேன்.

பாடசாலையின் அதிபர் தனது உரையில் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் தங்குமிட விடுதி என்பன தொடர்பில் அவர் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது. இந்தப் பகுதிக்கு கற்பிப்பதற்கு தென்மாகாணங்களிலிருந்துதான் ஆசிரியர்கள் வருகின்றார்கள். உங்களுக்கு அயலிலுள்ள பிரதேசங்களிலிருந்து ஆசிரியர்கள் வருகின்றார்களில்லை. யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்திருந்த பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அம்மையாரிடம், உங்களின் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம். தேசியக் கல்வியற் கல்லூரியிலிருந்து அடுத்து வெளிவரும் ஆசிரியர்களை இங்கு நியமிப்பதாக அவர் உறுதியளித்திருக்கின்றார். அது நடைபெற்றால் உங்களின் ஆசிரியர் பற்றாக்குறை நிறைவுபெற்றுவிடும்.

மேலும், இங்கு வேறு மாகாணங்களிலிருந்து அதுவும் தூர இடங்களிலிருந்து ஆசிரியர்கள் வருவதால் ஆசிரிய விடுதி அவசியமானதுதான். அதனை விரைவில் அமைப்பதற்கு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கல்வி எல்லாவற்றுக்கும் அடிப்படையானது. கல்வியால்தான் ஒரு பிரதேசம் அபிவிருத்தியடைய முடியும். ஆர்வமும், முயற்சியிருந்தால் எதையும் எம்மால் செய்ய முடியும். இங்குள்ள மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைபெற்று எமது மாகாணத்துக்குப் பெருமையைப் பெற்றுத்தரவேண்டும் என்று ."– என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க.பிரெட்லி ஜெனட், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.











# தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பானது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக உற்பத்திக் கைத்தொழில்களை பயனுள்ளதாக முன்னெடுத்தல், ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய சவால்கள் குறித்து இதன் போது ஆராயப்பட்டது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தின் ஆரம்ப முதலீடுகள் மேற்கொள்ளல் மற்றும் அவற்றின் முறையான கண்காணிப்பு, முதலீட்டு சபைகளை அண்டிய உள்ளூர் சிறு அளவிலான கைத்தொழில்களை உருவாக்குதல் மற்றும் சிறு மற்றும் மத்திய தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் வணிகக் கடன்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் பரவலாக ஆராயப்பட்டது.

கைத்தொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஆனால் இதுவரை விடுவிக்கப்படாத காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்ட வரிச் சலுகைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.









# நியூஸிலாந்தை வீழ்த்தியது இலங்கை மகளிர் அணி

இலங்கை மற்றும் நியூஸிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான சர்வ தேச இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் கிறைஸ்சர்ச்சில் நேற்று ஆரம்பமானது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து மகளிர் அணி 20 ஓவர்களில் 101 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

எமா மெக்லவ்ட் 44 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

பந்துவீச்சில் மல்கி மதாரா 3 விக்கெட்டுகளையும் இனோஷி பிரியதர்ஷனி, கவிசா தில்ஹாரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலளித்தாடிய இலங்கை மகளிர் அணிக்கு அணித்தலைவி சமரி அத்தபத்து அபாரமாக ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து வெற்றியை ஈட்டிக்கொடுத்தார்.

மற்றைய வீராங்கனைகள் பெரிதாக பிரகாசிக்கவிட்டாலும் தனி ஒருவராகப் போராடிய சமரி அத்தபத்து 48 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 9 பௌண்டரிகளுடன் 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்று வெற்றியை உறுதி செய்தார்.

இலங்கை அணி 14.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு வெற்றியை எட்டியது.

போட்டியின் சிறந்த வீராங்கனையாக மல்கி மதாரா தெரிவானார்.

இந்த வெற்றிக்கு அமைவாக 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 1-0 என இலங்கை மகளிர் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.




# வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மோதலில் ஒருவருக்குப் படுகாயம்

**(கனகராசா சரவணன்)**

கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் வர்த்தகப் பிரிவு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒரு மாணவன் காயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகத்தில் வர்த்தக பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்றுவரும் 4 மாணவர்களுககிடையே நேற்றுக் காலை ஏற்பட்ட வாய்த்தர்கம் கைகலப்பாக மாறியதையடுத்து ஒரு மாணவன் காயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மாணவன் பொலிஸ்/க்குச் செய்த முறைப்பாட்டையடுத்து தாங்கள் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்சப் பொலிஸார் தெரிவித்தனர்.





# மன்னாரில் நகர சபைக்கு மாத்திரம் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி போட்டி

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி நேற்றைய தினம் காலை மன்னார் நகர சபை தேர்தலுக்கான கட்டுப்பணத்தை மன்னார் தேர்தல் திணைக்களத்தில் செலுத்தியுள்ளது.

மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையிலான குழுவினர் இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் நகரசபை தேர்தலில் மாத்திரமே போட்டியிடும் நிலையில் இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ சார்பாக போட்டியிட்டு மன்னார் நகர சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சாதாரணை தரப் பரீட்சை திங்கள்கிழமை ஆரம்பம்

அரசு மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார், தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளின் முதலாம் தவணையின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கள்கிழமை ஆரம்பமாகவுள்ளதுடன் 26 ஆம் திகதி நிறைவு பெற உள்ளது.

முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, தேசிய அடையாள அட்டை விவரங்களை உறுதிப்படுத்தும் கடிதங்களைப் பெறாத பரீட்சார்த்திகளுக்கு அந்த கடிதத்தை வழங்குவதற்காக மாத்திரம் ஆள்பதிவு திணைக்களம் இன்று திறந்திருக்கும்.

பத்தரமுல்லையிலுள்ள பிரதான அலுவலகம், காலி, குருநாகல், வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா மாவட்டங்களிலுள்ள மாகாண அலுவலகங்கள் காலை 8.30 முதல் பிற்பகல் 12.30 வரை திறந்திருக்கும்.

மேற்படி கடிதத்தை drp.gov.lk எனும் ஆள்பதிவு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசித்து தரவிறக்கும் செய்து கொள்ள முடியும்.

இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் அதிபர் அல்லது கிராம உத்தியோகத்தரினால் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை கொண்டுவர வேண்டும் என ஆள்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.



# ஹகராபிடிய - ஜம்புதென்னப் பகுதியில் 3 வர்த்தக நிலையங்களில் தீப் பரவல்

(க.கிஷாந்தன்)

நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹகராபிடிய - ஜம்புதென்ன பகுதியில் மூன்று வர்த்தக நிலையங்களில் தீ பரவல் ஏற்பட்டது.

ஹாட்வெயார், மளிகைக்கடை மற்றும் மட்பாண்டம் விற்பனை நிலையம் என்பவற்றிலேயே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ பரவல் ஏற்பட்ட வர்த்தக நிலையக் கட்டடத்தொகுதி உரிமையாளர் ஒருவருக்குச் சொந்தமானது. சம்பவத்தின்போது அங்கு எவரும் இருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

தீ விபத்தில் மளிகைக்கடை முற்றாக தீக்கிரையாகியுள்ளது. ஏனைய இரு கடைகளும் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

மின்கசிவு காரணமாக தீ பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னாரில் 4 பிரதேச சபைகளிலும் காதர் மஸ்தானின் கட்சி களத்தில்!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் நகரசபை மற்றும் நான்கு பிரதேச சபைகளிலும் போட்டியிட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையிலான சிறிலங்கா தொழிலாளர் கட்சி சார்பாக நேற்றைய தினம் மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் மாவட்ட இணைப்பாளர் அபூபக்கர் தர்சின் தலைமையிலான குழுவினர் இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

இதேவேளை மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை தேசிய மக்கள் சக்தி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை இன்றைய தினம் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# மட்டக்களப்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 11 சபைகளுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகரசபை உட்பட 11 உள்ளூராட்சி மன்றங்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சின்னத்தில் போட்டியிடுகின்றோம். எனவே கோடரி காம்புகளுக்கு தொடர்ந்து வாக்குளை அளிக்காமல், சரியான - நேர்மையான - ஒரு தலைமைத்துவத்துக்கு கீழே மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற எமது கட்சியில் போட்டியிடுகின்றவர்களுக்கு வாக்குகளை அளிக்க அனைத்து மக்களும் முன்வரவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாநகரசபை, ஏறாவூர் நகரசபை உட்பட 11 சபைகளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். அதற்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளோம். சகல சபைகளையும் கைப்பற்றி ஆட்சி அமைப்போம்.

உள்ளூர் கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக இந்தத் தேர்தல் நடத்தப்படுகின்றது. ஆகவே உள்ளூரிலே மிக நேர்மையாக மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற நபர்களை அந்தந்த ஊர்களிலே போட்டியிட நிறுத்தியுள்ளோம். எனவே அந்த நபர்களை தெரிவு செய்து ஒரு சரியான தலைமைத்துவத்தை பலப்படுத்துவதற்கு இனியாவது மக்கள் ஒரு சரியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டும்.

எங்களுடைய கூட்டு விடயத்திலே தொடர்ந்தும் பேசிவருகின்றனர். அது தொடர்பான விரிவான விடயங்களை எமது தலைவர் ஒரு சில நாள்களில் தெளிவாக வெளியிடுவார்.

ஆனால் எங்களைப் பொறுத்தமட்டில் ஒற்றையாட்சி அரசமைப்பை நிராகரிக்கின்ற - நல்லாட்சி காலத்தில் கொண்டுவரப்பட்டு இப்போது கிடப்பிலே கிடக்கின்ற 'ஏக்கிய ராஜிய' திட்டத அரசமைப்பை நிராகரிக்கின்ற மற்றும் தமிழ் மக்களுக்கு இடம்பெற்றிருந்த இனழிப்பு தொடர்பாக விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு கொண்டு போவதற்கு உறுதுணையாக அதைப் பின்பற்றுகின்ற தரப்புக்களுடன் இணைந்து நாங்கள் பயணிப்பதாக இருந்தால் நிச்சயமாக எமது தலைமைத்துவம் சரியான முடிவினை எடுப்பார்கள். - என்றார்.

# திருகோணமலை மாவட்டத்தில் 9 சபைகளுக்கு தமிழரசு போட்டி



(எஸ்.கீதபொன்கலன்)

எமது இலங்கைத் தமிழரக் கட்சி இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் எமது கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தனித்தே போட்டியிடுகின்றது. திருகோணமலை மாநகர சபை உற்பட 9 உள்ளூராட்சி மன்றங்களில் எமது வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர் என்று தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று செலுத்திய பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

கோமரங்கடவெல, கந்தளாய், பதவிஸ்ரீபுர பிரதேச சபைகளிலும் கிண்ணியா நகர சபையிலும் தவிர ஏனைய 9 உள்ளூராட்சி மன்றங்களில் கட்சி இம்முறை போட்டியிடவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.



# ஒரு லட்சம் வீடுகள் முதல் உரிமைத் தொகை வரை

## தமிழக வரவு - செலவு திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

2025-2026 ஆம் நிதி ஆண்டுக்கான தமிழக பொது வரவு செலவு திட்டத்தை, சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று காலை சரியாக 9.30 மணியளவில் தாக்கல் செய்தார். தமிழக வரவு செலவு திட்ட உரையில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

- முதல்வர் கிராம சாலை திட்டத்தின் கீழ் 6,100 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம சாலைகள் 2,100 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.
- 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.
- அரசு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு நிதி 700 கோடி ரூபாவாக உயர்த்தப்படும்.
- அரசுப் பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் 50 கோடி ரூபாவாக செலவில் உருவாக்கப்படும்.
- அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விருப்பப்படி கைக் கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும்.
- பெற்றோர் இருவரையும் இழந்த 50,000 குழந்தைகளுக்கு 18 வயது வரை மாதந்தோறும் 2,000 ரூபா வழங்கப்படும்.
- சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதுகள் வழங்கப்படும். 10 ஊராட்சிகளுக்கு தலா 1 கோடி ரூபா ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- இராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.
- சென்னை சைதாப்பேட்டை - தாடண்டர் நகரில் 110 கோடி ரூபா செலவில் 190 குடியிருப்புகள் கட்டப்படும்.
- 40,000 அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும்.
- சென்னைக்கு அருகில் உலகத் தர வசதிகளுடன் புதிய நகரம் அமைக்கப்படும்.
- கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 3,500 கோடி ரூபாவில் ஊரகப் பகுதிகளில் 1 லட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும்.
- ஆண்டுதோறும் உலகத் தமிழ் ஒலிம்பியாட் போட்டி நடத்தப்படும். 1 கோடி ரூபா பரிசுத்தொகை வழங்கப்படும்.

வரவு செலவு திட்ட உரையை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு,

“இந்தியாவின் 2 ஆவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் தமிழகம் என்று பெருமிதம் தெரிவித்தார். மேலும், 'பன்முக வளர்ச்சியை நோக்கி தமிழகம் முன்னேறி வருகிறது. மனிதநேயம், சமூக நீதி, பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தமிழ்நாடு நடைபோடுகிறது. சமநிலை தவறாமல் தமிழகத்தை வழிநடத்துவோம்.” என்றார்.







# தமிழக வரவு-செலவு திட்ட அறிவிப்புகளில் போலித்தனமே அதிகம்! விஜய் விமர்சனம்

"ஒன்றிய பா.ஜ.க. அரசு தனது வரவு செலவு திட்டத்தில், தமிழ்நாட்டையே ஒதுக்கியது. இந்த விளம்பர மொடல் அரசோ தமிழ்நாட்டிலேயே இருந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களின் நலன் களையே மறந்துவிட்டு ஒரு வரவு செலவு திட்டத்தை வெளியிட்டுள்ளது."

– இவ்வாறு தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் விமர்சித் துள்ளார்.

தமிழக வரவு செலவு திட்டம் தொடர் பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

"தமிழ்நாடு அரசின் 2025-26 ஆண்டுக்கான நிதி நிலை அறிக் கையில் புதிதாக 9 இடங்களில் தொழிற் பேட்டை அமைக்கப்படும், பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு மாதந் தோறும் உதவித் தொகை, ஈட்டிய விடுப்பு சரண் 15 நாள்கள் வரை பணப் பலன், பத்து லட்சம் வரை மதிப்புள்ள சொத்தை பெண்கள் பெயரில் பதிவு செய்தால் பதிவுத் தொகையில் சலுகை என்பது போன்ற அறிவிப்புகளை வரவேற்கிறோம். அறிவிப்புகள் எல்லாம் நடைமுறைக்கு வருமா என்ற பலமான கேள்வி எழாமல் இல்லை. காரணம், இந்த விளம்பர மாடல் அரசின் கடந்த கால வெற்று விளம்பர அறிவிப்புகளே.

புதிய அரசு கலை – அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கல்லூ ரிக் கல்வியின் தரத்தை நிலைநிறுத்த என்ன முன்னெடுப்புகளை எடுக்கப் போகின்றீர்கள்? அடிப்படையான சாலை வசதிகளைக் கவனிக்காமல் அன்புச் சோலை போன்ற போலி அக்கறை காட்டும் வெற்று அறிவிப்பு ஏன்? கல்லூரி மாணவர்களுக்கு மீண்டும் மடிக்கணினி வழங்கப்படுவது போல, பள்ளி மாண வர்களுக்கு எப்போது வழங்கப்படும் என்ற அறிவிப்பு இல்லையே ஏன்?

ஆசிரியப் பணி இடங்கள் நிரப்பப் படும் என்ற அறிவிப்பு, வெற்றிடங்களை நிஜமாகவே நிரப்பும் அறிவிப்பா? இல்லை, வழக்கம் போலான விளம்பர மாடல் அரசின் வெற்று அறிவிப்பா என்பது போகப் போகத்தான் தெரியும். அண்ணா பல்கலையைத் தரவரிசை யில் மேம்படுத்தும் அறிவிப்பெல் லாம் இருக்கட்டும். முதலில், அண்ணா பல்கலையில் பயிலும் மாணவிக ளுக்கு முறையான பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.

மக்கள் பாதிக்கப்படாத வண்ணம் புதிய விமான நிலையம் அமைக்கப் படும் என்ற தமிழ்நாட்டு அரசின் அறி விப்பு குறித்து இந்த நிதி நிலை அறிக் கையில் விளக்கப்படவே இல்லை. மாறாக, மக்கள் நலன் சார்ந்த எந்த விளக்க மும் இல்லாமல் பரந்தூர் விமான நிலையம் அமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு பரந்தூர் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்யப்படும் துரோக மாகவே இருக்கும்.

விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் இல்லை. தேர்தல் வாக்குறுதியான காஸ் மானியம் 100 ரூபா வழங்கப்படும் என்பது என்ன ஆனது என்று தெரியவில்லை. அதே போல, பெட்ரோல்,டீசல் விலைக் குறைப்பு வாக்குறுதியில் சொன்னது போல முழுமையாக நிறைவேற்றப் படவில்லை. மேலும், ரேஷனில் சர்க்கரை கூடுதலாக வழங்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளும் என்ன ஆயின என்றே தெரியவில்லை.

பொதுமக்களை வெகுவாக பாதிக் கும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வசூலிக்கப்படும் மின்சாரக் கட்டணம் மாதம்தோறும் செலுத்தக்கூடியதாக மாற்றப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி என்ன ஆனதோ? வெற்று விளம்பர அரசுக்கே வெளிச்சம் அரசு ஊழி யர்களுக்குக் கூடுதல் குடியிருப்புகள் கட்டுவது இருக்கட்டும். அரசு ஊழியர் களின் லட்சக்கணக்கான குடும்பங்கள் நலன் சார்ந்த ஜாக்டோ ஜியோ கூட்டமைப் பின் முக்கியக் கோரிக்கையான அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அமல்படுத்துவது பணி நிரந்தரம் குறித்த அறிவிப்பு எதுவும் இல்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் பெரும்பான்மையாக ஏதேதோ அறிவிப்பு கள் என்று போலித்தனமே அதிகம் உள்ளது. ஆனால், சாதாரண நிலையில் இருக்கும் பொதுமக்கள் நேரடியாகப் பலன் அடையும் அறிவிப்புகள் ஏதும் அற்றதாகவே இருக்கிறது.

விளம்பர மொடல் அரசின் மறை முக முதலாளியாக இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு வரவு செலவு திட்டத்தில், டில்லியில் இருந்துகொண்டு தமிழ் நாட்டையே மறந்து ஒதுக்கியது. இந்த விளம்பர மொடல் அரசோ தமிழ்நாட்டி லேயே இருந்துகொண்டு தமிழ்நாட்டு மக்களின் நலன்களையே மறந்து விட்டு ஒரு வரவு செலவு திட்டத்தில் வெளியிட்டுள்ளது. இதுதான் இவர்கள் இருவரும் ஒரே மனநிலை கொண்ட உறவுக்காரர்கள் என்பதற்கான உறுதிப் பாடு ஆகும்.

மக்களைப் பற்றிக் கவலைப்படா மல், தேர்தல் வாக்குறுதிகளைக் காற் றில் பறக்கவிட்டு, வெற்றுக் காகிதத் தால் பட்டம் விடும் பாசாங்கு வேலையே இந்த வரவு செலவு திட்ட அறிவிப்பு. இந்த ஏமாற்று வேலைகளுக்கு எல்லாம் மக்கள் கொடுக்கும் மிகப் பெரிய பதிலடியாக 2026 சட்டமன்றத் தேர் தல் முடிவுகள் இருக்கும். இதை இந்த வெற்று விளம்பர மொடல் தி.மு.க. அரசு விரையில் உணரும்." என்று விஜய் தெரிவித்துள்ளார்.

# அணுசக்தி தொடர்பாக ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அமெரிக்கா

## ஈரானுக்கு ஆதரவு வழங்கும் சீனா, ரஷ்யா



அணுசக்தி தொடர்பாக ஈரானுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்கா கோரியுள்ள நிலையில், சீனாவும் ரஷ்யாவும் ஈரானுக்கு ஆதரவாகச் செயல்பட முன்வந்துள்ளன.

பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலே பேச்சுவார்த்தைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனச் சிரேஷ்ட சீன மற்றும் ரஷ்ய இராஜதந்திரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தவிர, பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பல்வேறு தடைகள் நீக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை ஒன்றின் போது ஈரானுக்கு எதிரான சர்வதேச தடைகளை நீக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்குப் பதிலாக ஈரான் தனது அணுசக்தி திட்டங்களைக் கட்டுப்படுத்த ஒப்புதலை அளித்திருந்தது.

# உக்ரைனுடனான போர் நிறுத்தத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் இணக்கம்!



உக்ரைனுடனான போர் நிறுத்தத்திற்கு உடன்படுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இந்த வார தொடக்கத்தில் அமெரிக்காவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் அவர் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையில் நடைபெற்று வந்த போரை தற்போது தற்காலிகமாக நிறுத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யா மீது மேலும் தடைகள் விதிக்க தீர்மானித்துள்ளதாக யுக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ரஷ்யாவின் எண்ணெய் எரிவாயு மற்றும் வங்கி துறைகள் மீது அமெரிக்கா மேலும் தடைகளை விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சிரியாவின் மின்சார உற்பத்திக்கு இயற்கை எரிவாயு வழங்கும் கட்டார்



சிரியாவின் மின்சார உற்பத்திக்காககட்டார்இயற்கைஎரிவாயுவைவழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவில் நிலவும் மின்சாரத் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கட்டாரிலிருந்து நாளொன்றுக்கு 2 மில்லியன் க்யூபிக் மீட்டர் அளவிலான இயற்கை எரிவாயுவை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கட்டார் கையெழுத்திட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கட்டார் நாட்டிலிருந்து ஜோர்தான் நாட்டைக் கடந்து செல்லும் குழாய் வழியாக சிரியாவின் டெயிர் அலி மின் நிலையத்திற்கு வழங்கப்படும் இந்த இயற்கை எரிவாயுவின் மூலம் நாளொன்றுக்கு 400 மெகா வோட்ஸ் அளவிலான மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளாக சிரியாவின் முன்னாள் ஜனாதிபதி பஷார் அல் - அசாத்தின் அரசுக்கு எதிராக அந்நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு போரினாலும், மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகளினாலும் சிரியாவின் பொருளாதாரம் மற்றும் மின்சார உற்பத்தி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வளர்ச்சிகள் அனைத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.03.2025




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாளாக இருக்கும். எளிதில் அனைத்து செயல்களையும் செய்வீர்கள். அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்று வெற்றி நிச்சயம்.

பணியில் உங்கள் சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும். மனதை நிலைநிறுத்தி அனுசரித்து பணி யாற்ற முயலுங்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து மகிழ்வீர்கள். இது நல்ல பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். வங்கி யிலும் கணிசமான தொகையை பராமரிப்பீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.




இன்று பதற்றம் காணப்படும். இசையை கேட்பதன் மூலம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை காண்பதன் மூலம் மன துக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை நன்றாக திட்டமிட்டு கவனமுடன் மேற்கொள்ள வேண்டும். பணியில் தவறு கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே திறமையாக கையாள வும்.

உங்கள் துணையிடம் அமைதியாக பேச வேண்டும். பிரச்னைகளை அமைதியாக தீர்க்க வேண்டும்.

இன்று பணப் புழக்கம் அவ்வளவு சிறப்பாக இருக் காது. செலவுகளும் அதிகமாக காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று ஓய்வுக்கு நேரம் கிடைக்காது. கால்களில் வலி காணப்படும்.




இன்று சிறப்பான நாளாக இருக் காது. முக்கியமான முடிவுகள் எடுப் பதை தவிர்க்கவும். எதையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பணியில் சவால்கள் நிறைந்திருக்கு, அதிகரிக்கும் பணிகள் காரணமாக பணி யில் தவறுகள் நேரலாம். பணிகளை சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

நீங்கள் சிறிய விஷயத்தையும் பெரிதாக்குவீர்கள். உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

அஜாக்கிரதை காரணமாக பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

செரிமானம் சம்பந்தமான கோளாறுகள் காணப்படும்.




பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை பற்றி சிந்திப்பீர்கள். வீட்டு பிரச்சினைகளை சமாளிப்பது பற்றிய கவலை இருக்கும். பாதுகாப்பின்மை உணர்வை தவிர்த்து விடுங்கள். பிரார்தனை மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

சிறந்த முறையில் பணியாற்ற அருமையான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்புக்கு சன்மானமாக பதவி உயர்வு கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் மனம் திறந்து பேச வேண்டும். இந்த அணுகுமுறை அவரை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. மருத் துவ செலவுகள் அதிகமாகக் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர் கள். மகிழ்ச்சியான தருணங்கள் உங்களை உற்சாகமாக வைத்திருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்க லாம்.

நீங்கள் உங்களின் பலவீனங்களை புறந்தள்ளி பலத்துடன் பணியாற்றுவீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் காதலை வெளிப்படுத்தும் விதமாகப் பழகுவீர்கள். உங்கள் துணையுடன் நல் லுறவைப் பராமரிப்பீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். சேமிப்புக்கான அடித்தளத்தை இன்று அமைப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




கடின உழைப்பின் மூலம் இன்றைய நாளைச் சிறப்பாக்கிக் கொள்ளலாம். இன்றைய நாளை சிறந்த முறையில் உபயோகிப்பதன் மூலம் உங்களின் திறமையை நிரூபிக்கலாம்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கான நேரம் குறைந்து காணப்படும். இதனால் உங்களுக்கு கவலை உண்டாகும். எனவே குறித்த நேரத்தில் பணி களை முடிக்க திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

உங்கள் குடும்ப முன்னேற்றம் பற்றி உங்கள் துணையிடம் விவாதிப்பீர்கள். இதன் மூலம் நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத்தொகை அல்லது சலுகை கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது.




உங்களுடைய அறிவைப் பயன் படுத்தி இன்றைய நாளை திட்டமிடுங் கள். சில சமயங்களில் நீங்கள் பொறு மையை இழக்க நேரும். எனவே அமைதியாக இருப்பது நல்லது.

பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை உங்களால் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப்பூர்வமாக நடந்து கொள்வீர்கள், உறவில் திருப்தி நிலவ இதனைத் தவிர்த்தல் வேண்டும்.

இன்று பணத்தை அதிகமாக செலவு செய்வீர்கள். எனவே கடன்களை எதிர்கொள்ள நேரலாம்.

உங்கள் தாய்க்கு ஒவ்வாமை காரணமாக பாதிப்பு ஏற்படும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். இன்றைய நாள் கடினமாக இருக்கும். நீங்கள் நம் பிக்கையோடு செயல்பட்டால் விரும்பி யதை அடையலாம்.

பணியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மையை உணர்வீர் கள். இந்த மாதிரி உணர்வுகள் உறவுக்கு உகந்ததல்ல.

குடும்ப பெரியவர்களின் ஆரோக்கியத்திற்கு செலவு செய்யும் வகையில் இன்று அதிக செலவினங்கள் காணப்படும். சேமிப்புக் குறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.03.2025




முறையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்றைய நாளை அற்புதமான நாளாக ஆக்கலாம். உங்கள் தொடர்பாடல் திறனை மேம்படுத்தினால் பல சிறப்புகளைப் பெறலாம். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்த வேண்டும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தபோதிலும் குறித்த நேரத்துக்குள் பணியை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை தன்னம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையிலான அன்பு அதிகரிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சிறிய அளவில் கடன் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




செயல்களை நிறைவேற்றுவதில் தெளிவான மனநிலையை சார்ந்திருப்பீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும்.

பணிகளைப் பொறுத்தவரை நிறைய சவால்களை எதிர் கொள்ள நேரும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சில அசௌகரியமான உணர்வுகளை கொள்வீர்கள். நட்பான மற்றும் சகஜமான அணுகுமுறை தேவை.

இன்று பணபுழக்கம் மகிழ்சிகரமாக இருக்காது. பணத்தை தக்க வைக்கும் திறமைகள் இருந்த போதிலும் அதிக செலவுகள் இருப்பதன் காரணமாக பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று பயனுள்ள நாளாக இருக்கும். நீங்கள் நேர்மறையான போக்கில் செயல்பட்டால் இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக முடிப்பதில் சில ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். முன்னுரிமைப்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் இனிமையான தொடர்பாடல் மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதை சிறந்த விஷயங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் அவசியம். உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிடவேண்டியது அவசியம். இன்று சில சௌகரியங்களை இழக்கலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளைக் காட்டுவீர்கள். அதன் மூலம் நற்பெயரைப் பெறுவீர்கள்.

கவலைகளின் காரணமாக பதட்டம் உண்டாகும். உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவின் நல்லிணக்கத்தை அது பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

வீட்டு சீரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் பொறுப்புகள் அதிகரிக்கும். செலவைக் கட்டுப்படுத்துங்கள்.



# மட்டக்களப்பில் யாழ் இளைஞன் வானுடன் மோதிய விபத்தில் பலி

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியிலுள்ள தனியார் வங்கிக்கு முன்னால் வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி ஒருவர் மீது வான் ஒன்று மோதிய வீதிவிபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாகவும் வான் சாரதியைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் மட்டு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கொக்குவில், காங்கேசன்துறை வீதியைச்சேர்ந்த 28 வயதுடைய மதுசகின் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை வீதியில் கொழும்பை நோக்கி நேற்றுக் காலை 6.30 மணிக்கு பயணித்த வான் தனியார் வங்கி ஒன்றுக்கு முன்னால் வீதியைக் கடக்க முற்பட்ட இளைஞருடன் மோதி விபத்துக்குள்ளானலில் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்திய சாலை அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு பஸ்ஸில் வந்து இறங்கிய நிலையிலே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வான் சாரதியைக் கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையகப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.